**நீதித்துறை நடுவர் எண்.2, நீதிமன்றம், திண்டுக்கல்**
**முன்னிலை: திரு.C. தினேஷ்குமார், B.A.LL.B(Hons)., LL.M.,**
**நீதித்துறை நடுவர் எண்.2 , திண்டுக்கல்**
**2026 ம் ஆண்டு மே மாதம் 22 ம் நாள் வெள்ளிக்கிழமை**
**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 624/2018**
**CNR.No.TNDG03-005377-2018**

அரசுக்காக,
காவல் ஆய்வாளர்,
நகர் வடக்கு காவல் நிலையம்,
திண்டுக்கல்
குற்ற எண். 842/2018
U/s.394 IPC ... குற்ற முறையிடுபவர்

/ எதிர் /

1.மதிவாணன், (21/2018),
த/பெ.சின்னச்சாமி,
எண்.21, செக்காடி தெரு,
திருமலைராயபுரம், ஸ்ரீராமபுரம் அஞ்சல்,
திண்டுக்கல்.

2.விக்னேஷ், (19/2018),
த/பெ.தாமோதரன்,
அஞ்சுகம் தெரு,
கிழக்கு கோவிந்தாபுரம்,
திண்டுக்கல்.

3.விஜய் ஜெயசீலன், (20/2018), **(3 வது எதிரி இறந்துவிட்டதால் அவர் மீதான குற்றச்சாட்டு அற்றுப்போய்விட்டது)**
த/பெ.அருள் செல்வம்,
எண்.91-Z, பள்ளிவாசல் தெரு,
கிழக்கு கோவிந்தாபுரம்,
திண்டுக்கல்.

...எதிரிகள்

**Case – Summary**

| *Statement as per rule 106 of criminal rules of practice, 2019* | | |
|---|---|---|
| **S.No** | **Description** | **Details** |
| 1. | Serial Number | Calender Case (C.C) No. 842 of 2018 |
| 2. | Name of the Police station and crime Number | State Represented by Inspector of Police, Town North Police Station, Dindigul in Cr.No.842/2018 |
| 3. | Name of the accused | A1) Mathivanan<br>A2) Vignesh<br>A3) Vijay Jeyaseelan **(Died)** |
| 4. | Father's Name | A1) Chinnasamy<br>A2) Dhamotharan<br>A3) Arul Selvam |
| 5. | Occupation | - |
| 6. | Residence | A1) No.21, Sekkadi Street, Thirumalai Rayapuram, Sri Ramapuram Post, Dindigul.<br><br>A2) Anjugam Street, East Govindhapuram, Dindigul.<br><br>A3) No.91-Z, Pallivasal Street, East Govindhapuram, Dindigul. |
| 7. | Age | A1- (21/2018)<br>A2- (19/2018)<br>A3- (20/2018) |
| 8. | Date of occurrence | 19.09.2018 |
| 9. | Date of complaint<br>Date of filing Charge sheet | 20.09.2018<br>03.12.2018 |
| 10. | Date of apprehension | A1 – 09.10.2018<br>A2 – 16.10.2018<br>A3 – 11.10.2018 |
| 11. | Date of release on bail | A1 – 19.12.2018 |

<table>
<tr><td></td><td></td><td colspan="3">A2 – 13.11.2018<br>A3 – 28.01.2019</td></tr>
<tr><td>12.</td><td>Date of commitment</td><td colspan="3">Not applicable</td></tr>
<tr><td>13.</td><td>Date of furnishing copies of document U/s.207 Cr.P.C.</td><td colspan="3">17.12.2018</td></tr>
<tr><td>14.</td><td>Date of questioning / Charge framing and plea of the accused</td><td colspan="3">On 24.12.2018 the accused were questioned on substance of accusation U/s.394 IPC. Accused were denied the case as false and pleaded not guilty and claims to be tried.</td></tr>
<tr><td rowspan="9">15</td><td rowspan="9">Date of commencements of trial -The date of examination – in chief and cross- examination of a witness</td><td>Witnesses</td><td>Examined in – Chief</td><td>Examined - in Cross</td></tr>
<tr><td>PW1</td><td>29.07.24</td><td>11.05.26</td></tr>
<tr><td>PW2</td><td>02.06.25</td><td>02.06.25</td></tr>
<tr><td>PW3</td><td>30.06.25</td><td>30.06.25</td></tr>
<tr><td>PW4</td><td>09.02.26</td><td>-</td></tr>
<tr><td>PW5</td><td>23.02.26</td><td>23.02.26</td></tr>
<tr><td>PW6</td><td>09.03.26</td><td>09.03.26</td></tr>
<tr><td>PW7</td><td>09.03.26</td><td>09.03.26</td></tr>
<tr><td>PW8</td><td>17.03.26</td><td>17.03.26</td></tr>
<tr><td>16.</td><td>The date of examination of the accused under section 313 of the code – Closed of trial</td><td colspan="3">11.05.2026</td></tr>
<tr><td>17.</td><td>Sentence on order</td><td colspan="3">முடிவாக, 1 முதல் 3 எதிரிகள் தான் அ.சா.2 ஐ தாக்கி அவர் அணிந்திருந்த செயின், மோதிரம் மற்றும் அவர் வைத்திருந்த செல்போன் மற்றும் பணத்தை கொள்ளையடித்துச் சென்றனர் என்பதை அரசு தரப்பில் இருந்து எதிரிகள் மீதான இ.த.ச. பிரிவு 394–ன் கீழான குற்றச்சாட்டை அரசு தரப்பில் தகுந்த சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களின் மூலம் நிரூபிக்கப்படாததால், சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளிப்பதே நீதியின் நலனுக்கு உகந்தது என கருதி, 1, 2 எதிரிகளை குற்றவாளி</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| | | இல்லை என முடிவு செய்து குவிமுச பிரிவு 248(1)ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது. 3 வது எதிரி இறந்துவிட்டதால் அவர் மீதான குற்றச்சாட்டு அற்றுப்போய்விட்டது. |
| 18. | Service of copy of Judgment or finding on accused | No. The Judgment was uploaded on CIS portal and made available in E- Courts |
| 19. | Explanation of delay | There is no inordinate in the disposal of the case |
| 20. | Property order | Property order passed. |

இவ்வழக்கு 03.12.2018 ம் தேதி தாக்கல் செய்யப்பட்டு இந்நீதிமன்றத்தில் ஆண்டுபட்டிகை வழக்கு எண்.624/2018 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இந்நீதிமன்றத்தில் இறுதியான விசாரணைக்கு வந்தபொழுது அரசுத்தரப்பில் கற்றறிந்த அரசு உதவி குற்றவியல் வழக்கறிஞர் நிலை–2 அவர்கள் ஆஜராகியும், குற்றம் சாட்டப்பட்ட எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.திருவேங்கடம், B.A., B.L., அவர்கள் முன்னிலையாகியும், இரு தரப்பு வாதங்களைக் கேட்டும், ஆவணங்களை பார்வையிட்டும் இது நாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்தும் வந்து இறுதியாக இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

## தீர்ப்புரை

### I. அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்:

1. அரசு தரப்பு வழக்கு யாதெனில், இவ்வழக்கின் புகார்தாரரின் தந்தையான ஆனந்தகுமார் என்பவர் தொழிற்பேட்டையில் சுத்தியல், மண்வெட்டி தயாரிக்கும் கம்பெனி வைத்து தொழில் செய்து வருவதாகவும்,

கடந்த 18.09.2018 ம் தேதி மேற்படி ஆனந்தகுமார் ஈரோடு, நாமக்கல், திருச்செங்கோடு ஆகிய ஊர்களுக்கு சென்றுவிட்டு திரும்ப வீட்டிற்கு வருவதற்காக 19.09.2018 ம் தேதி அதிகாலை 01.30 மணிக்கு நகர் வடக்கு காவல் நிலைய சரகம் மெயின்ரோட்டில் உள்ள பேட்டா செருப்பு கடை முன்பு கிழக்கிலிருந்து மேற்கு பார்த்து நடந்து சென்றபோது TN 49 BF 1392 என்ற எண்ணுள்ள YAMAHA FZ இருசக்கர வாகனத்தை இவ்வழக்கின் 2 வது எதிரி ஓட்ட, 1,3 எதிரிகள் பின்னால் அமர்ந்துகொண்டு மேற்படி இடத்தில் மேற்கிலிருந்து கிழக்கு பார்த்து மேற்படி ஆனந்தகுமாரின் அருகில் வந்து கொள்ளையடிக்க வேண்டும் என்று மூன்று எதிரிகளும் பொதுவான எண்ணம் கொண்டு ஆனந்தகுமாரிடம் தகராறு செய்து 1, 3 எதிரிகள் கீழே கிடந்த கல்லை எடுத்து மேற்படி ஆனந்தகுமாரின் உச்சந்தலையின் வலது பக்கம் இடது பக்க கழுத்து ஆகிய இடங்களில் எறிந்து கொடுங்காயம் ஏற்படுத்தியும், மேற்படி ஆனந்தகுமாரிடம் இருந்த சுமார் 2 பவுன் நவரத்தின கல் மோதிரம் –1, சுமார் 3 பவுன் தங்கசெயின் –1, ரூ.3,000/– மதிப்புள்ள சாம்சங் செல்போன் –1 ஆகியவற்றை கொள்ளையடித்துக்கொண்டு மேற்படி இருசக்கர வாகனத்தில் மூன்று எதிரிகளும் தப்பிச் சென்ற குற்றத்திற்காக 1 முதல் 3 எதிரிகள் மீது சட்டப்பிரிவு 394 இதச படி திண்டுக்கல் நகர் வடக்கு காவல் நிலைய காவல் ஆய்வாளரால் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>II.வழக்கின் நகல்கள் வழங்குதல் மற்றும் குற்றச்சாட்டு குறித்து வினவுதல்:</u>**

2. குற்ற இறுதி அறிக்கை பரிசீலனைக்கு பின் எதிரிகளுக்கு எதிராக முகாந்திரம் இருந்ததால் இந்நீதிமன்றத்தால் மேற்படி எதிரிகளுக்கு எதிராக

இவ்வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டு, நீதிமன்றத்திலிருந்து எதிரிகளுக்கு இவ்வழக்கு சம்மந்தமாக நீதிமன்றத்தில் ஆஜராக அழைப்பானை அனுப்பி அவர்கள் முன்னிலை ஆனவுடன் வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தும் இலவசமாக கு.வி.மு.ச பிரிவு 207 ன் கீழ் 17.12.2018 ம் நாள் அன்று வழங்கப்பட்டு போதிய அவகாசம் வழங்கப்பட்டு, வழக்காவணங்களைப் பரிசீலனை செய்து எதிரிகள் மீதான இதச சட்டப்பிரிவு 394–ன் கீழ் குற்றச்சாட்டை விளக்கிக் வினாவியபோது எதிரிகள் குற்றத்தை மறுத்ததால் எதிரிகளுக்கு எதிராக இதச சட்டப்பிரிவு 394–ன் படி குற்றச்சாட்டு வனைந்து தமிழில் வாசித்து விளக்கிக்கூறிய போது குற்றவாளி இல்லை என மறுத்ததால் அரசு தரப்பு சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது.

**III. அரசு தரப்பால் முன்னிலைப்படுத்தப்பட்ட சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:**

3. அரசு தரப்பில் எதிரிகள் மீதான குற்றத்தை நிரூபிக்க மொத்தம் அ.சா.1 முதல் அ.சா.8 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.16 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**IV. அரசு தரப்பு சாட்சிகளின் சுருக்கம் :**

4. அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்ட புகார்தாரர் தனது நீதிமன்ற சாட்சியத்தில் கடந்த 19.09.2018 ம் தேதி எதிரிகள் மூவரும் தனது அப்பாவிடம் பிரச்சனை செய்து கல்லால் அடித்து காயத்தை ஏற்படுத்தி தனது அப்பா அணிந்திருந்த நவரத்தின மோதிரம் 2 பவுன், கழுத்தில்

அணிந்திருந்த 3 பவுன் தங்க நகையையும், அவர் வைத்திருந்த பணத்தையும் பறித்துக்கொண்டு சென்றுவிட்டதாகவும், நடந்த சம்பவத்திற்காக 20.09.2018 ம் தேதி காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார். அவர் மூலமாக புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

5. இவ்வழக்கில் பாதிக்கப்பட்ட நபரான ஆனந்த குமார் அ.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது நீதிமன்ற சாட்சியத்தில் எதிரிகள் தன்னை தாக்கி தன்னிடமிருந்து செயின், மோதிரம், செல்போன் மற்றும் பணத்தை கொள்ளையடித்தது குறித்தும் மற்ற விவரங்கள் குறித்தும் சாட்சியம் அளித்துள்ளார். அவர் மூலமாக அ.சா.ஆ.2 குறியீடு செய்யப்பட்டுள்ளது.

6. கேள்விப்பட்ட சாட்சியாக விசாரிக்கப்பட்ட அ.சா.3 தனது நீதிமன்ற சாட்சியத்தில் கடந்த 19.09.2018 ம் தேதி காலை தனது தம்பி தனக்கு போன் செய்து அவரது அப்பா ஆனந்தகுமார் உடல் நலம் பாதிக்கப்பட்டிருப்பதாகவும், உடனடியாக வீட்டிற்கு வருமாறும் அழைத்ததாகவும், தான் உடனடியாக சென்று பார்த்தபோது தனது சித்தப்பா ஆனந்தகுமார் தலையில் இரத்தக்காயத்துடன் பதற்றமாக வாய் குளறி பேச முடியாத நிலையில் இருந்தார் என்றும், அவரை பேட்டா ஷோரூம் அருகே மூன்று நபர்கள் கல்லால் அடித்து செல்போன், நகை மற்றும் பணத்தை பறித்து சென்றுவிட்டதாக சொன்னார் என்றும், மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்துச் சென்றதாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

7. ஒப்புதல் வாக்குமூல சாட்சியாக விசாரிக்கப்பட்ட அ.சா.4 தனது நீதிமன்ற சாட்சியத்தில் கடந்த 2018ம் வருடம் தேதி, மாதம் நினைவில் இல்லை, தானும் தனது நண்பர் குணசேகரனும் திருச்சி ரோட்டில் காலை 08.00 மணியளவில் ரயில்வே பாலத்திற்கு அருகே சென்றபோது போலிசார் ஒரு குற்றவாளியைப் பிடித்து விசாரித்ததாகவும், அதற்கு சாட்சியாக இருக்கும்படி கையொப்பம் பெற்றதாக சாட்சியம் அளித்துள்ளார். அவர் மூலமாக அ.சா.ஆ.3 முதல் அ.சா.ஆ.5 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

8. மற்றொரு ஒப்புதல் வாக்குமூல சாட்சியான அ.சா.5 தனது நீதிமன்ற சாட்சியத்தில் கடந்த 2018ம் வருடம் தேதி மாதம் நினைவில் இல்லை, காலை 08.00 மணியளவில் தானும் பாண்டியராஜனும் திருச்சி ரோடு மேம்பாலம் கீழ் வந்துகொண்டிருந்தபோது போலிசார் ஒரு நபரை பிடித்து விசாரித்துக்கொண்டிருந்ததாகவும், அவர் திருட்டுக்கூட்டத்தில் சம்பந்தப்பட்டவர் என்று வாக்குமூலம் கொடுத்தார் என்றும், செயின் மற்றும் செல்போன், இருசக்கர வாகனத்தை ஒப்படைத்தார் என்றும், அந்த பொருட்களை அத்தாட்சி தயார் செய்து கைப்பற்றி தன்னிடம் கையொப்பம் பெற்றதாக சாட்சியம் அளித்துள்ளார். அவர் மூலமாக அ.சா.ஆ.6 முதல் அ.சா.ஆ.8 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மற்றொரு ஒப்புதல் வாக்குமூல சாட்சியான அ.சா.6 தனது நீதிமன்ற சாட்சியத்தில் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் சாட்சியாக கையொப்பம் செய்தது குறித்து சாட்சியம் அளித்துள்ளார்.அவர் மூலமாக அ.சா.ஆ.9 மற்றும் அ.சா.ஆ.10 குறியீடு செய்யப்பட்டுள்ளது.

9. அ.சா.7 ஆக விசாரிக்கப்பட்ட காவல் ஆய்வாளர் தனது நீதிமன்ற சாட்சியத்தில் கடந்த 20.09.2018 ம் தேதி திண்டுக்கல் நகர் வடக்கு காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியில் இருந்தபோது எழிலரசன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரைப் பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததாகவும், வழக்கினை மேல் விசாரணைக்காக ஆய்வாளர் பார்வைக்கு சமர்பித்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார். அவர் மூலமாக அ.சா.ஆ.11 குறியீடு செய்யப்பட்டுள்ளது.

10. அ.சா.8 ஆக விசாரிக்கப்பட்ட புலன் விசாரணை அதிகாரி தனது நீதிமன்ற சாட்சியத்தில் வழக்கினை தனது புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடத்தைப் பார்வையிட்டு மாதிரி வரைபடம், பார்வை மகஜர் தயார் செய்தது குறித்தும், எதிரிகளை கைது செய்து ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்து அத்தாட்சியில் வழக்குச் சொத்துக்களை கைப்பற்றி எதிரிகளை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியது குறித்தும், சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தது குறித்தும், வழக்குச் சொத்துக்களை படிவம் 91 மூலம் நீதிமன்றத்தில் ஒப்படைத்து RPR No.160/2018 ஆக பதிவு செய்தது குறித்தும், புலன் விசாரணை முடித்து எதிரிகள் மீது குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்தது குறித்தும் சாட்சியம் அளித்துள்ளார். அவர் மூலமாக அ.சா.ஆ.12 முதல் அ.சா.ஆ.16 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. இத்துடன் அரசுத் தரப்பு சாட்சிகள் விசாரணை முடிவுற்றது.

**<u>V. எதிரிகளுக்கு  கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ) பிரிவின் கீழ் வினவுதல்</u>**

11. அரசு தரப்பில் சாட்சியத்தை முடித்துக் கொண்ட பின்பு எதிரிகளுக்கு பாதகமாக அரசு தரப்பு சாட்சிகள் அளித்த சங்கதிகளை கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)ன் கீழ் 11.05.2026 ம் தேதி தொகுத்தளித்து வினாவியபோது அரசு தரப்பு சாட்சியங்களை "பொய் சாட்சி" என்று சாட்சியங்களை மறுத்தனர்.

**<u>VI. எதிரிகள் தரப்பு சாட்சிகள்</u>**

12. எதிரிகள் தரப்பில் சாட்சிகள் இல்லை என கூறினார்கள். அதனால், எதிரிகள் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை, சான்றுப்பொருட்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. அத்துடன் எதிரிகள் தரப்பு சாட்சி விசாரணை முடிவுற்றது.

**<u>VII. வாதுரைகள்</u>**

**<u>1. அரசு தரப்பில்</u>**

13. கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் வாதிடும் போது எதிரிகளுக்கு எதிரான வழக்கு தகுந்த சாட்சிய, சான்றாவணங்களின் அடிப்படையில் நிரூபிக்கப்பட்டுள்ளதாகவும், எதிரிகள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் வழக்குச் சொத்துக்கள் எதிரிகளிடமிருந்து கைப்பற்றப்பட்டுள்ளதாகவும், இவ்வழக்கில் காயம்பட்ட நபர் எதிரிகளை அடையாளப்படுத்தி சாட்சியம் அளித்துள்ளதகாவும், இவ்வழக்கின் எதிரிகள் அ.சா.2 ஐ தாக்கி வழக்குச் சொத்துக்களை கொள்ளையடித்துச் சென்றதை அரசு தரப்பில்  சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்துள்ளதாகவும்,

எனவே இவ்வழக்கில் எதிரிகளுக்கு தண்டனை வழங்க வேண்டுமென்று வாதிட்டார்.

## 2. எதிரிகள் தரப்பில்

14. எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் வாதிடும் போது எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டு எதுவும் நிரூபிக்கப்படவில்லை என்றும், எதிரிகள் மீது இவ்வழக்கு தவறாக பதியப்பட்டுள்ளதாகவும், ஒப்புதல் வாக்குமூல சாட்சியாக விசாரிக்கப்பட்ட அ.சா.4 பிறழ் சாட்சியம் அளித்துள்ளதாகவும், எதிரிகள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் வழக்குச் சொத்துக்கள் கைப்பற்றப்படவில்லை என்றும், எதிரிகளுக்கு எதிராக அரசு தரப்பில் இவ்வழக்கை சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்பதால் சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளித்து, எதிரிகளை விடுதலை செய்ய வேண்டும் என்று வாதிட்டார்.

## VIII.ஆய்விற்குரிய பிரச்சனை

15. இவ்வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சினை யாதெனில் எதிரிகளுக்கு எதிரான அரசுத் தரப்பு குற்றச்சாட்டுக்கள் நியாயமாக சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதே ஆகும்.

## தீர்ப்புரை

16. அரசு தரப்பானது, இவ்வழக்கின் புகார்தாரரின் தந்தையான ஆனந்தகுமார் என்பவர் தொழிற்பேட்டையில் சுத்தியல், மண்வெட்டி தயாரிக்கும் கம்பெனி வைத்து தொழில் செய்து வருவதாகவும், கடந்த

18.09.2018 ம் தேதி மேற்படி ஆனந்தகுமார் ஈரோடு, நாமக்கல், திருச்செங்கோடு ஆகிய ஊர்களுக்கு சென்றுவிட்டு திரும்ப வீட்டிற்கு வருவதற்காக 19.09.2018 ம் தேதி அதிகாலை 01.30 மணிக்கு நகர் வடக்கு காவல் நிலைய சரகம் மெயின்ரோட்டில் உள்ள பேட்டா செருப்பு கடை முன்பு கிழக்கிலிருந்து மேற்கு பார்த்து நடந்து சென்றபோது TN 49 BF 1392 என்ற எண்ணுள்ள YAMAHA FZ இருசக்கர வாகனத்தை இவ்வழக்கின் 2 வது எதிரி ஒட்ட, 1,3 எதிரிகள் பின்னால் அமர்ந்துகொண்டு மேற்படி இடத்தில் மேற்கிலிருந்து கிழக்கு பார்த்து மேற்படி ஆனந்தகுமாரின் அருகில் வந்து கொள்ளையடிக்க வேண்டும் என்று மூன்று எதிரிகளும் பொதுவான எண்ணம் கொண்டு ஆனந்தகுமாரிடம் தகராறு செய்து 1, 3 எதிரிகள் கீழே கிடந்த கல்லை எடுத்து மேற்படி ஆனந்தகுமாரின் உச்சந்தலையின் வலது பக்கம் இடது பக்க கழுத்து ஆகிய இடங்களில் எறிந்து கொடுங்காயம் ஏற்படுத்தியும், மேற்படி ஆனந்தகுமாரிடம் இருந்த சுமார் 2 பவுன் நவரத்தின கல் மோதிரம் –1, சுமார் 3 பவுன் தங்கசெயின் –1, ரூ.3,000/– மதிப்புள்ள சாம்சங் செல்போன் –1 ஆகியவற்றை கொள்ளையடித்துக்கொண்டு மேற்படி இருசக்கர வாகனத்தில் மூன்று எதிரிகளும் தப்பிச் சென்ற குற்றத்திற்காக 1 முதல் 3 எதிரிகள் மீது சட்டப்பிரிவு 394 இதச –வின் கீழ் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

17. அரசு தரப்பில் எதிரிகள் மீதான 394 இதச–வின் கீழான குற்றச்சாட்டை நிரூபிக்கப்பட்டுள்ளதா என்று பார்க்கும் முன் இ.த.ச. பிரிவு 394 ன் அகக்கூறுகளைப் பார்க்க வேண்டும்.

◆ குற்றம் சாட்டப்பட்ட நபர் ஒரு கொள்ளை அடிக்கும் செயலைச் செய்திருக்க வேண்டும் அல்லது கொள்ளை அடிக்க முயற்சி செய்திருக்க வேண்டும்.

◆ கொள்ளையடிக்கும் செயலின் போது, அங்குள்ள நபருக்கு குற்றம் சாட்டப்பட்டவர் (எதிரி) தன்னிச்சையாக காயம் ஏற்படுத்தியிருக்க வேண்டும்.

◆ அந்த காயம், கொள்ளை அடிக்கும் நோக்கத்திற்காகவோ, கொள்ளையடித்து விட்டு தப்பிப்பதற்காகவோ அல்லது கொள்ளையடிக்கப்பட்ட சொத்தைக் கொண்டு தப்பிச் செல்வதற்காகவோ ஏற்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

18. இவ்வழக்கு தீர்ப்புரையை படிக்கும்போது சிரமமின்றி புரிந்து கொள்வதற்காகவும், விவாதம் செய்யப்பட்ட தலைப்பு மீண்டும் விவாதிக்கப்படாமல் தடுப்பதற்காகவும், இந்த தீர்ப்புரையானது மூன்று பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளது.

- குற்ற நிகழ்வு
- கைது, ஒப்புதல் வாக்குமூலம்,அதன் அடிப்படையில் கைப்பற்றுதல்
- புலன் விசாரணை, சாட்சிகளின் வாய்மொழி சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களின் மூலம் குற்ற நிகழ்வு நிரூபிக்கப்பட்டுள்ளதா?

## <u>குற்ற நிகழ்வு</u>

19. மேற்சொன்ன குற்றச்சாட்டை அரசு தரப்பு நிரூபித்துள்ளதா என்று பார்க்கும்போது, இவ்வழக்கில் அரசு தரப்பில் இருந்து குறியீடு செய்யப்பட்ட

அ.சா.ஆ.1 ஆன புகாரைப் பரிசீலனை செய்யும் போது, "அபிராமி அம்மன் கோவில் தெற்கு வாசலில் மேற்கு நோக்கி இரவு 01.30 மணிக்கு நடந்து வந்து கொண்டு இருக்கும்போது பேட்டா ஷோரும் செப்பல் கடை எதிர்புறம் யாரோ அடையாளம் தெரிந்த, பெயர் விலாசம் தெரியாத 3 நபர்கள் இரு சக்கர வாகனத்தில் வந்து மறித்து அவரிடம் இருந்த செல்போன், நவரத்தின கல் மோதிரம் – சுமார் 2 பவுன், அவர் கழுத்தில் போட்டிருந்த 3 பவுன் செயின், அவர் வசூல் செய்து வைத்திருந்த பணம் அடங்கிய பையைப் பிடுங்கி அவரை கல்லால் இடதுபுறம் தலையில் அடித்து இரத்தக் காயம் ஏற்படுத்தியும், இடது பக்க கழுத்துக்கு கீழ் சிராய்ப்பு காயத்தையும் ஏற்படுத்தியதாக" புகார்தாரர் புகார் அளித்துள்ளார். மேலும், இவ்வழக்கில் அ.சா.ஆ.11 ஆன முதல் தகவல் அறிக்கையை பரிசீலனை செய்யும் போதும் மேற்சொன்ன சங்கதிகள் இடம் பெற்றுள்ளன. மேலும், இவ்வழக்கில் அ.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்பட்ட மாதிரி வரைபடம் மற்றும் அ.சா.ஆ.13 ஆக குறியீடு செய்யப்பட்ட பார்வை மகஜர் போன்றவற்றைப் பரிசீலனை செய்யும்போதும் மற்றும் இவ்வழக்கில் குறியீடு செய்யப்பட்ட அ.சா.ஆ.7, அ.சா.ஆ.8 மற்றும் அ.சா.ஆ.10 ஆன அத்தாட்சிகள் மற்றும் அ.சா.ஆ.16 ஆன படிவம் 91 மூலம் கைப்பற்றப்பட்ட வழக்குச் சொத்துகளைப் பரிசீலனை செய்யும் போதும் குற்ற நிகழ்வு நடந்துள்ளது என்பதை அரசு தரப்பால் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

20. இருப்பினும் எதிரிகள் தான் மேற்படி குற்ற நிகழ்வில் ஈடுபட்டார்கள் என்பதை நிரூபிப்பதற்கு எதிரிகளை கைது செய்து பின்

எதிரிகளிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலம் பெற்றதை பற்றி விரிவாக பார்க்க வேண்டியுள்ளது.

**<u>கைது ஒப்புதல் வாக்குமூலம் அதன் அடிப்படையில் கைப்பற்றுதல்</u>**

21. குற்ற நிகழ்வு நடந்த பின்பு எதிரிகளை கைது செய்து எதிரிகள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் போலீசார்கள் படிவம் 91 மூலம் அத்தாட்சியில் குறிப்பிட்டுள்ள வழக்கு சொத்துக்களை கைப்பற்றி உள்ளனர்.

22.மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தை போலீசாரிடம் கொடுத்துள்ளதால் அதை வைத்து எதிரிகள் தான் மேற்படி குற்றச்செயலில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்று கருத இயலாது. மேற்படி குற்ற சம்பவத்தை எதிரிகள் தான் செய்தார்களா என்று அரசு தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளதா என்று பரிசீலனை செய்ய வேண்டும். அவ்வாறு பார்க்கையில் ஒப்புதல் வாக்குமூல சாட்சியாக விசாரிக்கப்பட்ட அ.சா.4 தனது முதல் விசாரணையில் " கடந்த 2018 ம் வருடம் தேதி மாதம் நினைவில் இல்லை, நானும் எனது நண்பர் குணசேகரனும் திருச்சி ரோட்டில் காலை 08.00 மணியளவில் ரயில்வே பாலத்திற்கு அருகே சென்றபோது போலிசார் ஒரு குற்றவாளியைப் பிடித்து விசாரித்ததாகவும், அதற்கு சாட்சியாக இருக்கும்படி கையொப்பம் பெற்றார்கள்" என்று சாட்சியம் அளித்துள்ளாரே தவிர, எதிரி தனது முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் அளித்ததாகவோ, தனது முன்னிலையில் வழக்குச் சொத்துக்களை எதிரி போலிசாரிடம் ஒப்படைத்ததாகவோ, அந்த வழக்குச் சொத்துக்களை

போலிசார் தனது முன்னிலையில் அத்தாட்சி தயார் செய்து கைப்பற்றியதாகவோ எந்தவொரு சாட்சியமும் அளிக்கவில்லை.

23. மேலும் மற்றொரு ஒப்புதல் வாக்குமூல சாட்சியான அ.சா.5 குணசேகரன் அவரது முதல் விசாரணையில் " காலை 08.00 மணியளவில் நானும் பாண்டியராஜனும் திருச்சி ரோடு மேம்பாலம் கீழ் வந்துகொண்டிருந்தபோது போலிசார் ஒரு நபரை பிடித்து விசாரித்துக்கொண்டிருந்தார்கள். அவர் திருட்டுக் கூட்டத்தில் சம்பந்தப்பட்டவர் என்று வாக்குமூலம் கொடுத்தார். செயின் மற்றும் செல்போன், இருசக்கர வாகனத்தை ஒப்படைத்தார். அந்த பொருட்களை அத்தாட்சி தயார் செய்து கைப்பற்றி என்னிடம் கையொப்பம் பெற்றார்கள்" என்று சாட்சியம் அளித்துள்ளார். ஆனால் அவர் தனது குறுக்கு விசாரணையில், " நான் எதிரிகளைப் பார்க்கவில்லை என்றால் சரிதான். அவர்களிடம் இருந்து போலிசார் என்ன பொருட்கள் கைப்பற்றினார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். கைப்பற்றும்போது நான் பொருட்களை பார்க்கவில்லை. ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சி எங்கு வைத்து தயார் செய்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் சாட்சியாக கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான்" என்று முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளார்.

24. மேலும், மற்றொரு ஒப்புதல் வாக்குமூல சாட்சியான அ.சா.6 அவரது முதல் விசாரணையில் " பழனிரோடு காந்தி மார்க்கெட் வளைவில் உள்ள பெட்ரோல் பங்க அருகே போலிசார் நின்றுகொண்டிருந்தபோது,

நானும் மற்றொரு நபரும் அங்கு சென்றபோது போலிசார் ஒரு நபரை விசாரித்துக்கொண்டிருந்தார்கள். அவர் எங்கள் முன்னிலையில் வாக்குமூலம் கொடுத்தார். அந்த வாக்குமூலத்தை பதிவு செய்து எங்களிடம் சாட்சியாக இருக்கும்படி கையொப்பம் பெற்றார்கள்" என்று சாட்சியம் அளித்துள்ளார். ஆனால் அவர் தனது குறுக்கு விசாரணையில், " நான் எதிரியைப் பார்ப்பதற்கு முன்பு எதிரி போலிசாரிடம் என்ன வாக்குமூலம் கொடுத்தார் என்றும் அவரிடமிருந்து இருந்து என்ன வழக்குச் சொத்துக்கள் கைப்பற்றினார்கள் என்று எனக்குத் தெரியாது என்றால் சரிதான் என்றும், என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் போலிசார் காவல் நிலையத்தில் வைத்துதான் டைப் செய்யப்பட்டது என்றால் சரிதான்" என்று முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளார்.

25. ஆகவே, திருட்டு சம்பந்தமான குற்ற வழக்குகளில் அதிலும் எதிரிகளை அடையாளம் காண முடியாத வழக்குகளில் ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் கைப்பற்றுதலும், ஒப்புதல் வாக்குமூல சாட்சிகள் அளிக்கின்ற சாட்சியங்களை வைத்து மட்டுமே எதிரிகளின் குற்றச் செயலை அறிய முடியும். ஆனால், இவ்வழக்கில் ஒப்புதல் வாக்குமூல சாட்சியாக விசாரிக்கப்பட்ட அ.சா.4, அ.சா.5, அ.சா.6 ஆகியோர்கள் எதிரிகள் குற்றச்செயலில் ஈடுபட்டதாகவோ அல்லது அவர்கள் ஈடுபட்டு ஒப்புதல் வாக்குமூலம் அளித்ததாகவோ அல்லது அவர்களிடமிருந்து வழக்குச் சொத்துக்கள் கைப்பற்றப்பட்டது பற்றியோ, அத்தாட்சி தயார் செய்யப்பட்டது பற்றியோ உறுதியூட்டும் வகையில் எந்தவொரு சாட்சியமும் அளிக்காத நிலையில் எதிரிகள் கொடுத்த

ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் தான் வழக்கு சொத்துக்கள் கைப்பற்றப்பட்டதா என்றும், அந்த சொத்துக்கள் அனைத்தும் எதிரிகளிடமிருந்து தான் கைப்பற்றபட்டதா என்றும் இந்நீதிமன்றத்திற்கு சந்தேகம் எழுந்துள்ளது.

**<u>புலன் விசாரணை, சாட்சிகளின் வாய்மொழி சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களின் மூலம் குற்ற நிகழ்வு நிரூபிக்கப்பட்டுள்ளதா?</u>**

26. மேலும், இவ்வழக்கில் அ.சா.8 ஆக விசாரிக்கப்பட்ட புலன் விசாரணை அதிகாரி அவரது முதல் விசாரணையில் " 09.10.2018 ம் தேதி திண்டுக்கல் பழனி ரோடு மேற்கு தாலுகா செல்லும் ரோட்டில் போலிஸ் பார்ட்டியுடன் வாகன தணிக்கையில் ஈடுபட்டுக்கொண்டிருந்தபோது சந்தேகத்திற்கிடமாக TN 49 BF 1392 Yamaha FZ இருசக்கர வாகனத்தில் வந்த எதிரி ஒருவரை நிறுத்தி விசாரிக்க எதிரி மதிவாணன் தாமாக முன்வந்து குற்றத்தை ஒப்புக்கொண்டதால் காரணம் கூறி கைது செய்து எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் மோகன்குமார், சரவணக்குமார் ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்ததாகவும், எதிரி ஆஜர் செய்த 3 பவுன் மதிப்புள்ள தங்க செயின் மற்றும் 2 பவுன் நவரத்தின கல் வைத்த மோதிரம் ஆகியவற்றையும் அதே சாட்சிகள் முன்னிலையில் அத்தாட்சியில் கைப்பற்றியதாக" சாட்சியம் அளித்துள்ளார்.

27. ஆனால், இவ்வழக்கில் ஒப்புதல் வாக்குமூல சாட்சியாக விசாரிக்கப்பட்ட அ.சா.4, அ.சா.5, அ.சா.6 ஆகியோர்கள் எதிரிகள் குற்றச்செயலில் ஈடுபட்டதாகவோ அல்லது அவர்கள் ஈடுபட்டு ஒப்புதல்

வாக்குமூலம் அளித்ததாகவோ அல்லது அவர்களிடமிருந்து வழக்குச் சொத்துக்கள் கைப்பற்றப்பட்டது பற்றியோ, அத்தாட்சி தயார் செய்யப்பட்டது பற்றியோ உறுதியூட்டும் வகையில் எந்தவொரு சாட்சியமும் அளிக்காத நிலையில், இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி 1 முதல் 3 எதிரிகளை எவ்வாறு இவ்வழக்கில் எதிரிகளாக சேர்த்தார் என்றோ அல்லது எவ்வாறு அவர்கள் குற்ற செயலில் ஈடுபட்டார்கள் என்று எதிரிகளின் குற்றச் செயல்களை உறுதியூட்டும் விதமாக நிரூபிக்கும் வகையில் புலன் விசாரணை அதிகாரி சாட்சியங்களை முன்னிலைப்படுத்தவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

28. மேலும், இவ்வழக்கில் பாதிக்கப்பட்ட நபரான அ.சா.2 அவரது முதல் விசாரணையில் " ஆஜர் எதிரிகள் இருவரும் அந்த சண்டையின் போது என்னை பிடித்துக்கொண்டார்கள் மற்றொரு நபர் சாலை அருகே ரோடு போடுவதற்காக வைத்திருந்த கல்லை எடுத்து எனது இடது பக்க தலையில் போட்டுவிட்டார். கல்லை போட்ட நபர் இன்று நீதிமன்றத்திற்கு வரவில்லை. அவரைப் பார்த்தால் எனக்கு அடையாளம் காட்ட தெரியும் " என்று சாட்சியம் அளித்துள்ளார். ஆனால் இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி எதிரிகளின் அடையாளத்தை உறுதியூட்டும் வகையில் அடையாள அணிவகுப்பு நடத்தி இந்நீதிமன்றத்தில் அறிக்கை சமர்பிக்கவில்லை. மேலும், அ.சா.2 கூறியவாறு எதிரிகள் தாக்குவதற்கு பயன்படுத்திய கல்லை புலன் விசாரணை அதிகாரி கைப்பற்றி இந்நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை. மேலும், மேற்சொன்னவாறு எதிரிகளை அ.சா.2 அடையாளப்படுத்தினாலும், எதிரிகளிடமிருந்துதான்

வழக்குச் சொத்துக்கள் கைப்பற்றப்பட்டது என்பதை ஒப்புதல் வாக்குமூல சாட்சிகளோ, அல்லது அத்தாட்சி சாட்சிகளோ, உறுதியூட்டும் வகையில் சாட்சியம் அளிக்கவில்லை.

29. மேலும், இவ்வழக்கில் அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்ட புகார்தாரர் அவரது முதல் விசாரணையில் " போலிசார் விசாரணையில் அந்த பகுதியில் இருந்த CCTV கேமரா பதிவுகளை வைத்து எதிரிகள் விஜய் ஜெயசீலன், விக்னேஷ் (எ) விக்கி, மதிவாணன் ஆகியோர்கள் எனது அப்பாவை கொடுமையாக தாக்கி எனது அப்பா அணிந்திருந்த நகை, நவரத்தின மோதிரத்தை பறித்துள்ளார்கள் என்று போலிசார் தெரிவித்தார்கள்" என்று சாட்சியம் அளித்துள்ளார். ஆனால் இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி மேற்படி CCTV பதிவுகள் குறித்து எந்தவொரு சாட்சியமும் அளிக்கவில்லை. மேலும், மேற்படி CCTV பதிவுகளை இந்நீதிமன்றத்தில் ஆஜர் செய்து குறியீடு செய்யப்படவில்லை. ஆகவே, வழக்கின் எதிரிகள் தான் மேற்படி குற்றச்செயலில் ஈடுபட்டு அவர்களிடமிருந்து தான் வழக்குச் சொத்துக்கள் கைப்பற்றப்பட்டதா என்ற சந்தேகத்தை புலன் விசாரணை அதிகாரி தனது புலன் விசாரணை மூலம் உறுதியூட்டும் வகையில் சாட்சியங்களை முன்னிலைப்படுத்தவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

30. முடிவாக, 1 முதல் 3 எதிரிகள் தான் அ.சா.2 ஐ தாக்கி அவர் அணிந்திருந்த செயின், மோதிரம் மற்றும் அவர் வைத்திருந்த செல்போன் மற்றும் பணத்தை கொள்ளையடித்துச் சென்றார்கள் என்பதை அரசு தரப்பில் இருந்து எதிரிகள் மீதான இ.த.ச. பிரிவு 394–ன் கீழான

குற்றச்சாட்டை அரசு தரப்பில் தகுந்த சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களின் மூலம் நிரூபிக்கப்படாததால், சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளிப்பதே நீதியின் நலனுக்கு உகந்தது என கருதி, 1, 2 எதிரிகளை குற்றவாளி இல்லை என முடிவு செய்து குவிமுச பிரிவு 248(1)ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது. 3 வது எதிரி இறந்துவிட்டதால் அவர் மீதான குற்றச்சாட்டு அற்றுப்போய்விட்டது.

31. இவ்வழக்கில் முன்னிறுத்தப்பட்ட RPR No.160/2018 ல் உள்ள வரிசை எண்.1. முதல் 3 வரையிலான வழக்குச் சொத்துக்களை இந்நீதிமன்ற Crl.M.P.No.8553/2018 நாள்.08.11.2018 உத்தரவின்படி மனுதாரர் / வழக்குச் சொத்தின் உரிமையாளர் மனு செய்து ஏற்கனவே இடைக்காலமாக பெற்றுச் சென்றுள்ளதை மேல்முறையீடு காலத்திற்கு பின்பு மனுதாரர்/வழக்குச் சொத்தின் உரிமையாளருக்கு நிரந்தரமாக பாத்தியப்பட உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரையானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் அலுவலக கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, 2026 ம் ஆண்டு மே மாதம் 22-ம் நாள் வெள்ளிக்கிழமை, இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

DINESH KUMAR C
Digitally signed by DINESH KUMAR C
Date: 2026.05.22 15:09:30 +0530

நீதித்துறை நடுவர் எண்.2
திண்டுக்கல்.

**I. அரசு தரப்பு சாட்சிகள்**

| Sl. No. | Examined as | Name of Witness | Date of examination | Exhibits Marked |
|---|---|---|---|---|
| 1. | அ.சா.1 | எழிலரசன்<br>த/பெ. ஆனந்தகுமார் | 29.07.2024 | அ.சா.ஆ.1 |
| 2. | அ.சா.2 | ஆனந்தகுமார்<br>த/பெ. மணிநாடார் | 02.06.2025 | அ.சா.ஆ.2 |
| 3. | அ.சா.3 | தினேஷ்குமார்<br>த/பெ. வீரமணி | 30.06.2025 | – |
| 4. | அ.சா.4 | பாண்டியராஜன்<br>த/பெ. செல்லையா | 09.02.2026 | அ.சா.ஆ.3 முதல் அ.சா.ஆ.5 |
| 5. | அ.சா.5 | குணசேகரன்<br>த/பெ. நாகரத்தினம் | 23.02.2026 | அ.சா.ஆ.6 முதல் அ.சா.ஆ.8 |
| 6. | அ.சா.6 | சரவணக்குமார்<br>த/பெ.முருகன் | 09.03.2026 | அ.சா.ஆ.9<br>அ.சா.ஆ.10 |
| 7. | அ.சா.7 | மகேஷ்<br>(காவல் ஆய்வாளர்) | 09.03.2026 | அ.சா.ஆ.11 |
| 8. | அ.சா.8 | தெய்வம்<br>(கூடுதல் மாவட்ட காவல் கணிகாணிப்பாளர்) | 17.03.2026 | அ.சா.ஆ.12 முதல் அ.சா.ஆ.16 |

**II. அரசு தரப்பு சான்றாவணங்கள் :**

| Sl. No. | Exhibits | Marked through | Date of Document | Description of document |
|---|---|---|---|---|
| 1. | அ.சா.ஆ.1 | அ.சா.1 | 20.09.2018 | புகார் |
| 2. | அ.சா.ஆ.2 | அ.சா.2 | – | வழக்குச் சொத்தின் புகைப்படம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 3. | அ.சா.ஆ.3 | அ.சா.4 | 11.10.2018 | எதிரி விஜய் ஜெயசீலன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2 வது கையொப்பம். |
| 4. | அ.சா.ஆ.4 | அ.சா.4 | 11.10.2018 | 11.10.2018 ம் தேதி 09.15 மணிக்கு தயார் செய்யப்பட்ட அத்தாட்சியில் உள்ள 2 வது கையொப்பம் |
| 5. | அ.சா.ஆ.5 | அ.சா.4 | 11.10.2018 | 11.10.2018 ம் தேதி 10.30 மணிக்கு தயார் செய்யப்பட்ட அத்தாட்சியில் உள்ள 2 வது கையொப்பம் |
| 6. | அ.சா.ஆ.6 | அ.சா.5 | 11.10.2018 | எதிரி விஜய் ஜெயசீலன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1 வது கையொப்பம். |
| 7. | அ.சா.ஆ.7 | அ.சா.5 | 11.10.2018 | 11.10.2018 ம் தேதி 09.15 மணிக்கு தயார் செய்யப்பட்ட அத்தாட்சி |
| 8. | அ.சா.ஆ.8 | அ.சா.5 | 11.10.2018 | 11.10.2018 ம் தேதி 10.30 மணிக்கு தயார் செய்யப்பட்ட அத்தாட்சி |
| 9. | அ.சா.ஆ.9 | அ.சா.6 | 09.10.2018 | எதிரி மதிவாணன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2 வது கையொப்பம் |
| 10. | அ.சா.ஆ.10 | அ.சா.6 | 09.10.2018 | 09.10.2018 ம் தேதி 10.30 மணிக்கு தயார் செய்யப்பட்ட அத்தாட்சி |
| 11. | அ.சா.ஆ.11 | அ.சா.7 | 20.09.2018 | முதல் தகவல் அறிக்கை |
| 12. | அ.சா.ஆ.12 | அ.சா.8 | 21.09.2018 | மாதிரி வரைபடம் |
| 13. | அ.சா.ஆ.13 | அ.சா.8 | 21.09.2018 | பார்வை மகஜர் |
| 14. | அ.சா.ஆ.14 | அ.சா.8 | 09.10.2018 | எதிரி மதிவாணன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி |

| | | | | |
|---|---|---|---|---|
| 15. | அ.சா.ஆ.15 | அ.சா.8 | 11.10.2018 | எதிரி விஜய் ஜெயசீலன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி |
| 16. | அ.சா.ஆ.16 | அ.சா.8 | 09.10.2018<br>11.10.2018 | படிவம் 91 (எண்ணிக்கை –2) |

**III. <u>அரசு தரப்பு சான்றுப் பொருள்கள்</u> – இல்லை**

**IV. <u>எதிரி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மற்றும் சான்றுப் பொருள்கள்</u> – இல்லை**

DINESH KUMAR C
Digitally signed by DINESH KUMAR C
Date: 2026.05.22 15:09:40 +0530

நீதித்துறை நடுவர் எண்.2
திண்டுக்கல்.

<u>குறிப்பு:</u>

1. இந்த வழக்கில் எந்த சாட்சியும் 3 முறைக்கு மேல் விசாரணைக்கு அழைக்கப்படவில்லை.
2. இவ்வழக்கின் முடிவு குறித்து இருதரப்பினருக்கும் தெரிவிக்கப்பட்டது.
3. இவ்வழக்கின் விசாரணையின்போது எதிரிகள் பிணையில் இருந்தனர்.